**பேஸ் லைன் வீதிச் செயற்திட்டம் - கட்டம் III - 2017**

பேஸ் லைன் வீதிச் செயற்திட்டம் - கட்டம் III இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதி வரையான 840 மீற்றர்கள் நீளமான புதிய வீதியை நிர்மாணிப்பதன் மூலம் வீதிப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,336 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்தின் முழுக் கிரயமும் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின்

நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2017ம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் மொத்தம் ரூபா 575 மில்லியன் வரிசை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் இன்னுமொரு செயற்திட்டத்திற்கு பின்னர் மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டில் எழுந்த செயற்திட்டத்தின் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக ஒதுக்கீட்டு தொகை ரூபா 15.58 மில்லியன் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிருலப்பனயிலிருந்து துடுஹமுவ சந்தி வரையான பேஸ்லைன் வீதியினை மறுசீரமைப்பதற்காக 2009ல் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட வேலைகள் காணி சுவீகரிப்பில் காணப்பட்ட சர்ச்சை காரணமாக 2012 முதல் கைவிடப்பட்டு காணப்பட்டது. செயற்திட்டத்தினால் 2017 திசெம்பர் 31ல் 0.3691 ஹெக்டாரின் 11 காணித்துண்டுகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது, இருப்பினும் 2.7283 ஹெக்டாரின் 143 காணித்துண்டு கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான வீட்டுத்திட்டத்தின் வடிவமைப்பிற்காக 2008ல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 1.17 மில்லியன் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பனும் 2017 திசெம்பர் 31ல் கூட வடிவமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது போன்ற வீட்டுத்திட்டத்தின் தேவைப்பாடுகள் குறித்த செயற்திட்டத்தின் நோக்க குறைப்பினுடாக கணக்காய்வின் போது நியாயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்**

செயற்திட்டத்தின் நோக்கெல்லை குறைக்கப்பட்டு காணப்பட்டது மேலும் அதன் செயற்பாடுகள் மிகவும் மந்தகதியான முன்னேற்றத்தை காட்டியது. இருப்பினும் நிறைவேற்று முகவரினால் செயற்பாடுகளின் தொடர்ச்சி தன்மை மற்றும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கான சாத்தியப்பாடு என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வழக்கமான அம்சமாக குறித்த செயற்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கான மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டவைகள் வரிசை அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இன்னுமொரு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.